# 4-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

**முன்னிலை : திரு.C.ராஜலிங்கம்.,பி.ஏ,பி.எல்.,**
**4-வது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**உடுமலைப்பேட்டை**

2025–ம் ஆண்டு மார்ச் மாதம் 20 – ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2055, குரோதி வருடம் பங்குனி திங்கள் 6–ம் நாள்

IA.No.1/2021
in
O.S.No.272/2021

T.அருணா ……... மனுதாரர்/வாதி

//எதிர்//

1. K.செந்தில்குமார்,
2. S.இந்திராணி ……... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்னர் 12.02.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.R.ஹரிபிரசாத்., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.சிதம்பரசாமி, அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசிலித்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

மனுதாரரால், இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 பிரிவு 1 மற்றும் 2–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–</u>**

அசல் வழக்கு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம்கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்துக்கள் எலையமுத்தூர் கிராம எல்லைக்குட்பட்டுள்ள விவசாய நிலங்கள் என்றும் வழக்கு சொத்துக்கள் வாதி, சதன், ராஜலட்சுமி, கஜஞானம் மற்றும் செங்குட்டுவன் ஆகியோருக்கு 27.12.2017 தேதியிட்ட ஆவண எண்.12558/2011–ன் படி பாத்தியப்பட்டது என்றும் மேற்படி நபர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு பள்ளி தொடங்க வேண்டும்

என்றும் Ayangaran Educational Trust என்ற பெயரில்28.12.2011 அன்று ஒரு Trust தொடங்கினார்கள் என்றும் இந்நிலையில் வழக்கிலுள்ள 1–ம் எதிர்மனுதாரர் இந்திராணி பெயரில் ஆவண எண்.12726/2011 ஆக 29.12.2011 அன்று ஒரு குத்தகை ஆவணம் எழுதி கொடுத்தார் என்றும் அதில் 30 வருடங்கள் காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டது என்றும், அதன்பின்னர் கொடிசில் ஆவண எண்.4280/2012 ஆக 12.06.2012 அன்று அவருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது என்றும் பின்னர் பள்ளி நடத்தியதில் சிரமம் இருந்ததால் வேறு கொடிசில் ஆவணங்கள் எழுதப்பட்டதாலும், அதன்பின்னர் வழக்கின் எதிர்மனுதாரரான செந்தில்குமாருக்கு ராஜலட்சுமி, கஜஞானம், செங்குட்டுவன் ஆகியோர்கள் தங்களுக்குரிய 3/5 பாகத்தை பொறுத்து ஆவணங்கள் எழுதிக் கொடுத்ததாகவும், அதன்பிறகு வாதி, சதன் மற்றும் செந்தில்குமார் உரிமையாளர்கள் என்றும் தொடர்ந்து மனுதாரர் பள்ளியில் நீடிக்க விரும்பாமல், அதற்காக ஒரு ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும் இந்நிலையில் சதன் தனக்குரிய 3/5 பங்கை பொறுத்து ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் இந்திராணி பெயரில் 05.05.2017 அன்று எழுதி வைத்துள்ளார் என்றும் அதன்பின்னர் வழக்கின் எதிர்மனுதாரர்களும், மனுதாரரும் சொத்தின் உரிமையாளர் என்றும் மனுதாரர் மேற்படி எதிர்மனுதாரர்களுக்கு தாவா சொத்தின் அருகில் உள்ள 5.40 ஏக்கர் நிலத்தை பொறுத்து தனக்குரிய 1/5 பங்கை 22.05.2017–ல் ஆவண எண். 3490/2017 ஆக கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றும் அதன்பின்னர் ஏற்கனவே பேசியிருந்தபடி எதிர்மனுதாரர்கள் தங்களுடைய 4/5 பாகத்தை இந்த மனுதாரருக்கு 22.05.2017–ல் ஆவண எண்.3491/2017 ஆக எழுதிகொடுத்து சொத்தின் அனுபவத்தை ஒப்படைத்து விட்டார்கள் என்றும் இதனால் மனுதாரர் சொத்தின் முழு உரிமையாளராகிவிட்டதாகவும், மேற்படி ஆவணத்தில் ஏற்கனவே எழுதி கொடுக்கப்பட்டிருந்த குத்தகை ஆவணத்தை குறிப்பிட்டு செல்லத்தக்கதல்ல என்று குறிப்பிடாவிட்டாலும், குத்தகை ஆவணம் செயலிழந்து விட்டதாகவும், கிரையத்தின்பேரில் சொத்து மனுதாரரால் முழு சுவாதீனத்தில் வைத்து சொத்து அனுபவிக்கப்பட்டு வருகிறது என்றும் 2021 –ம் ஆண்டு மார்ச் முதல் வாரத்தில் சொத்தை சுற்றி மனுதாரர் கம்பி வேலி அமைக்க முயன்றபோது

எதிர்மனுதாரர்கள் சொத்து பள்ளிக்கு சொந்தமானது என்றும் அதனால் வேலி அமைக்க விடமாட்டோம் என்று சொன்னதால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றும் மனுதாரர் தங்கள் சொத்தை பொறுத்து தங்களுடைய உரிமையை விளம்புகை செய்ய கேட்டும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும் அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மனு அனுமதிக்கத்தக்கது என்று கூறப்பட்டுள்ளது.

**<u>3. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் உரையின் சுருக்கம்:</u>**

மனுதாரரின் மனு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. பிரதிவாதிகள் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை வாதியே கண்டிப்பாக நிரூபிக்க வேண்டும். தாவா சொத்துக்கள் சமூகம் நீதிமன்ற அதிகார எல்லைக்குட்பட்டது என்பதையும், 4–வது பாராவில் சொல்லியுள்ள படி தாவா சொத்துக்கள் வாதிக்கும் மற்றும் நால்வருக்கும் 27–12–2011ம் தேதிய கிரையப்படி பாத்தியப்பட்டது என்பதையும், மேற்படியார்கள் 28–12–2011ம் தேதி ஒரு டிரஸ்ட் ஒப்பந்தம் ஏற்படுத்தியதாகவும், அதன்பின்பு 29–12–2011ம் தேதியன்று வாதி உள்ளிட்ட மற்ற நால்வரும் சேர்ந்து 2ம் பிரதிவாதியானவருக்கு ஒரு குத்தகை ஒப்பந்தம் ஏற்படுத்தியதாகவும், குத்தகை காலம் 30 வருடங்கள் என்றும் 15–06–2012ம் தேதி கூடுதல் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தி அதில் பள்ளியின் பெயரை மேற்படி கூடுதல் ஒப்பந்த பத்திரத்தின் மூலம் ஏற்படுத்திக்கொண்ட குத்தகை ஒப்பந்தப்பத்திரத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. 22–05–2017ம் தேதி பிரதிவாதிகள் வாதிக்கு தாவா சொத்துக்களை பொறுத்து கிரையப் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்பதில் எழுதிக் கொடுக்கப்பட்டது என்பதைத் தவிர வாதி அன்று முதல் தாவா சொத்துக்களில் தனிப்பட்ட சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறார் என்பது சரியல்ல.

**3.2)** தாவா சொத்துக்களைப் பொறுத்து வாதிக்கு கிரையம் கொடுத்ததால், 2–ம் பிரதிவாதி தாவா சொத்துக்களின் மேல் உள்ள குத்தகை பாத்தியத்தை கைவிட்டு விட்டதாகவும் சுவாதீனத்தை ஒப்படைப்பு செய்து

விட்டதாகவும் சொல்லியுள்ள சங்கதிகள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேலும் மேற்படி கிரைய பத்திரத்தின் குத்தகை ஆவணம் பற்றி குறிப்பாக சொல்லவில்லை என்றாலும் கூட சுவாதீனம் கொடுத்துள்ளது என்றும், அதனால் 29-12-2011ம் தேதிய குத்தகைப்பத்திரமும், 15-06-2012ம் தேதிய இணைப்பு பத்திரமும் சட்டப்படி செல்லக் கூடியதல்ல என்றும், தாவா சொத்துக்களைப் பொறுத்து குத்தகையை 2-ம் பிரதிவாதி வாதிக்கு சரண்டர் செய்து விட்டதாகவும், வாதி தாவா சொத்திற்கு வேலி அமைக்க கடந்த 2021ம் வருடம் மார்ச் முதல் வாரத்தில் முயற்சி செய்ததாகவும் இந்த பிரதிவாதிகள் அதற்கு ஆட்சேபணை செய்ததாகவும் வேலி அமைக்க வாதியை விடப்போவதில்லை என்று சொன்னதாகவும், காவல்துறையில் புகார்கொடுத்ததாக சொல்லியுள்ள சங்கதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

**3.3)** 29-12-2011ம் தேதிய குத்தகைப் பத்திரமும். 15-06-2012ம் தேதிய இணைப்பு பத்திரமும் வாதியை கட்டுப்படுத்தாது என்றும், குத்தகைதாரர் கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்ததால் மேற்படி பத்திரங்கள் வாதியை கட்டுப்படுத்தாது என்றும் 22-05-2017 அன்று தாவா சொத்துக்களின் சுவாதீனத்தை வாதியிடம் ஒப்படைத்ததாக கூறியுள்ளதையும், தாவா சொத்தின் சுவாதீனம் வாதியிடம் ஒப்படைக்கவில்லை என்பதும் குத்தகை ஆவணமும், இணைப்பு ஆவணமும் சட்டப்படியாக வலியுறுத்தக் கூடியதல்ல என்று சொல்லியுள்ளது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. குத்தகை ஆவணம் குறிப்பாக ரத்து செய்யாத நிலையில் மேற்படி ஆவணம் நடைமுறையில் உள்ளதாகவே சட்டத்தால் பார்க்கப்படும் குத்தகை ஆவணம் தற்போதும் நடைமுறையில் உள்ளது. வாதி மற்றும் பலர் சேர்ந்து "ஐங்கரன் கல்வி அறக்கட்டளை" என்ற பெயரில் கடந்த 2011ம் ஆண்டு ஒரு அறக்கட்டளை ஆரம்பித்து அதன்மூலம் "ஸ்ரீ ஷிரிஸ்டி விகாஸ் அகாடமி மெட்ரிக்பள்ளி" என்ற பள்ளியை ஆரம்பித்து கடந்த 2011ம் ஆண்டு முதல் நடத்தி வந்துள்ளனர் என்றும் அதன்பின்பு பல அறக்கட்டளை உறுப்பினர்கள் சட்ட நடைமுறையை பின்பற்றி விலக்கியும், சிலர் சேர்க்கப்பட்டும் தற்போது இந்த பிரதிவாதிகள் இருவரும் மற்றும் வனிதாமணி ஆகிய மூவரும் அறக்கட்டளை உறுப்பினர்களாக இருந்து கொண்டு பள்ளியை நடத்தி வருகிறார்கள். அதில் 1ம்

பிரதிவாதி பள்ளியின் தாளாளராகவும், 2–ம் பிரதிவாதி பள்ளியின் செயலாளராகவும், வனிதாமணி என்பவர் அறக்கட்டளை பொருளாளர் ஆகவும் இருந்து செயல்பட்டு வருகின்றனர்.

**3.4)** 2011–ம் ஆண்டு பள்ளி ஆரம்பிக்கும்போது தாவா சொத்துக்களையும் பிற சொத்துக்களையும் பள்ளி கட்டிடம் கட்டவும் மற்றும் பள்ளியின் பயன்பாட்டிற்காகவும் 30 வருட குத்தகைக்கு கொடுக்கப்பட்டது. மேற்படி குத்தகை பத்திரமானது 29–12–2011ம் ஆண்டு உடுமலைப்பேட்டை சார்பதிவு அலுவலகத்தில், 2–ம் பிரதிவாதி பெயரில் குத்தகைக்கு வரும் 28–12–2041ம் ஆண்டு வரை காலக்கெடு கண்டு பதியப்பட்டுள்ளது என்றும் குத்தகைக்கு பெறப்பட்ட தாவா சொத்துக்கள் பள்ளியின் விளையாட்டு மைதானமாகவும், பள்ளி வாகனங்கள் நிறுத்தவும், பள்ளிக்கு தேவையான குடிநீர் பெற ஆழ்குழாய் அமைத்தும் பள்ளியின் செயல்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**3.5)** வாதி அறக்கட்டளை உறுப்பினர் பொறுப்பில் இருந்து விலகும்போது வாதியின் பள்ளிக்கு செலவு செய்த வகையில் இந்த பிரதிவாதிகள் வாதிக்கு பணம் திருப்பி செலுத்த வேண்டியிருந்தது. அப்போது பிரதிவாதிகளிடம் பணம் இல்லாததால் பணம் செலுத்துவதற்கு உத்திரவாதமாக தாவா சொத்துக்களை வாதி பெயருக்கு 22–05–2017ம் தேதியன்று கிரையம் செய்யப்பட்டது. அப்போது வாதிக்கு தரவேண்டிய பணத்தை திருப்பிச் செலுத்திவிடும் போது தாவா சொத்துக்களை பள்ளிக்கு திருப்பி எழுதித் தரவேண்டும் என்ற வாய்மொழி பேச்சின்படி தாவா சொத்து கிரையம் கொடுக்கப்பட்டது. அதனால் தாவா சொத்தின் சுவாதீனம் வாதி வசம் ஒப்படைக்கப் படவில்லை. தாவா சொத்துக்களை பள்ளியின் விளையாட்டு மைதானமாகவும், பள்ளியின் வாகனங்களை நிறுத்தியும், தாவாசொத்தில் உள்ள ஆழ்குழாய் கிணற்றிலிருந்து நீர் எடுத்து பள்ளியின் உபயோகத்திற்கு பயன்படுத்தியும், பள்ளியின் சார்பில் தொடர்ந்து அனுபவிக்கப்பட்டு வந்துள்ளது.

**3.6)** இந்நிலையில் கடந்த 2023–ம் ஆண்டு சாட்சிகள் முன்னிலையில் பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்த வேண்டிய பணத்தை செலுத்தியுள்ளனர். வாதி மேற்படி பணத்தை பெற்றுக்கொண்டு தாவா சொத்துக்களை பிரதிவாதிகள்

பெயருக்கு கிரையம் செய்து தருவதாக கூறிய போது, வாதி பேரில் உள்ள நம்பிக்கையின் பேரில் பிரதிவாதிகள் இருக்க வாதி சொன்னபடி கிரையம் செய்து தராமல் பிரதிவாதிகளிடம் இருந்து தாவா சொத்துக்களை அபகரிக்க வேண்டி தாவாவை தாக்கல் செய்துள்ளார். மேலும் தாவாவில் நிரந்தர உறுத்துக் கட்டளை கேட்டு வாதி தாவா தாக்கல் செய்துள்ளது சட்டப்படி செல்லக்கூடியதல்ல. தாவாச் சொத்துக்கள் வாதியின் சுவாதீனத்தில் இல்லாத நிலையில், உறுத்துக்கட்டளை கோர வாதிக்கு உரிமையில்லை. தாவாச் சொத்துக்கள் பள்ளியின் உபயோகத்திற்கு என்று 2041–ம் ஆண்டு வரை குத்தகைக்கு கொடுக்கப்பட்டு பள்ளியால் அனுபவித்து வரும் நிலையில் வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை கோருவது சட்ட முரணானதாகும். மேலும் குத்தகை உரிமையை ரத்து செய்ய பரிகாரம் கோர வாதிக்கு 2041–ம் ஆண்டுவரை உரிமை இல்லை. மேலும் வாதி பெற்ற கிரையப்படி தாவா சொத்துக்களின் சுவாதீனம் வாதிக்கு ஒப்படைக்கப்படவில்லை என்பதால் வாதி பெற்றகிரையம் சட்டப்படி அமுலுக்கு வரவில்லை. சட்டப்படி அமுலுக்கு வராத கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் பரிகாரங்கள் கோர வாதிக்கு உரிமையில்லை. மேலும் தாவா சொத்துக்களை பிரதிவாதிகளிடம் இருந்து அபகரிக்க இந்த வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார். தற்போது தாவா சொத்துக்களின் சந்தை மதிப்பு உயர்ந்திருப்பதால் வாதி, பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து தர மறுத்து இந்த அநீத தாவாவை தாக்கல் செய்துள்ளார்.

**3.7)** வாதி கோரிய பரிகாரங்கள் வாதிக்கு வழங்கினால் பள்ளிக்கும், பள்ளியில் படித்தவரும் மாணவ, மாணவியருக்கும் மிகுந்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும். மாணவர்களின் எதிர்கால படிப்பும் பாதிக்ககூடிய வாய்ப்பு ஏற்படும். வாதி உண்மையாக கிரையம் பெற எண்ணியிருந்தால் குத்தகைப் பத்திரத்தை ரத்து செய்து விட்டு கிரையம் பெற்றிருப்பார். வாதி பெற்ற கிரையம் நிபகிரையம் என்பதால் தான் குத்தகை பத்தரம் ரத்து செய்யப்படவில்லை. ஆகவே வாதி கோரிய பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல. தாவாவிற்கு வழக்குமூலம் இல்லை. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்

இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதைக் காண்பதேயாகும்.

**5. தீர்வு:–**

இருதரப்பு வாதுரைகளையும் கவனமாக பரிசீலனை செய்து பார்க்கும்போது எதிர்மனுதாரர் தரப்பில் கூறியுள்ளதுபோல 22.05.2017 தேதியில் மனுதாரருக்கும் எதிர்மனுதாரர்கள் இருவரும் சேர்ந்து தங்களுக்குரிய 4/5 பங்கு சொத்துக்களை கிரையம் செய்து கொடுப்பதாக குறிப்பிட்டுள்ள கிரைய ஆவணத்தின் பதிவிறக்க நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் எதிர்மனுதாரர்களில் ஒருவரான இந்திராணி என்பவருக்கு ஆவண எண்.3117/2017 –ன் படி 3/5 பங்கு உள்ளது என்றும் செந்தில்குமாருக்கு கிரைய ஆவண எண்.4545/2013 ஆக 1/5 பங்கு உரிமைப்பட்டது என்பதும் மேற்படி ஆவணத்தின் மூலம் தெரியவருகிறது. இதன்படி வழக்கு சொத்துக்கள் எதிர்மனுதாரர்களுக்கு 4/5 பங்கும் மனுதாரருக்கு ஆவண எண். 12558/2011 –ன் படி ஏற்கனவே இருந்த 1/5 பாகமும் சேர்த்து வழக்கு சொத்து முழுவதும் வாதியான மனுதாரருக்கு கிரையம் கொடுக்கப்பட்டது தெரியவருகிறது.

**6.** எதிருரையில் எதிர்மனுதாரர்கள் மேற்படி கிரையம் குறித்தோ, முன் உரிமைகள் குறித்தோ எந்த தாவாவும் எழுப்பவில்லை. மாறாக ஏற்கனவே கொடுக்கப்பட்ட குத்தகை ஆவணம் மற்றும் கொடிசில் ஆவணங்கள் படி 30 ஆண்டுகள் அவை செல்லத்தக்கது என்றும் அதன்படி 2041–ம் ஆண்டு தான் மனுதாரர் சொத்தின் அனுபவம் குறித்து கேட்க வேண்டுமென்று வாதிடப்பட்டது. இதுதொடர்பாக 22.05.2017 தேதியிட்ட ஆவண எண்.3491/2017–ல்,

> **" பொதுவில் 1/5 பங்கு பாத்தியப்பட்ட சொத்துடன் எங்களுக்கு பாத்தியப்பட்ட 4/5 பங்கு சொத்தையும் இன்றே தங்கள் வசம் சுவாதீனம் ஒப்படைப்பு செய்து கொடுத்துவிட்டோம். இன்று முதல் மேற்படி முழு சொத்தை தாங்களே சர்வ சுதந்திர பாத்தியங்களுடன் தானாக விநியோக விற்கிரையங்களுக்கு தகுதியாக ஆண்டனுபவித்து கொள்ள வேண்டும். மேற்படி சொத்தை குறித்து இனிமேல் எங்களுக்காவது எங்களது வாரிசுகளுக்காவது எவ்வித பாத்திய சம்பந்தமும் பின் தொடர்ச்சியும் கிடையாது."**

**7.** மனுதாரர் தரப்பில் இதனை குறிப்பிட்டு கிரையம் எழுதி கொடுக்கப்பட்டபோது சு வாதீனமும் மனுதாரருக்கு ஒப்படைக்கப்பட்டது என்றும் எனவே அதற்கு முன்பு எழுதிக் கொடுக்கப்பட்ட குத்தகை மற்றும் கொடிசில் ஆவணங்களும் செயலிழந்துவிட்டது என்றும் மனுதாரர் வசம் உரிமை மற்றும் அனுபவம் நிரூபிக்கப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டுள்ளது. இவ்வாறு ஆவணங்களை கவனமாக பரிசீலித்து பார்க்கும்போது எதிர்மனுதாரர்கள் மேற்படி 22.05.2017 தேதியிட்ட கிரைய பத்திரப்படி கிரையம் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொண்டுள்ளநிலையில் அதில் கூறப்பட்டுள்ள வாசகங்களுக்கு கட்டுப்பட்டவர்களாகிறார்கள். சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டதாக காணப்பட்டதை தவிர வேறு எந்த வாசகங்களுக்கும் எதிர்மனுதாரர்கள் மறுப்பு தெரிவிக்கவில்லை. இதன்படி பார்க்கும்போது சொத்தை கிரையம் கொடுக்கும்போது குறிப்பாக சுவாதீனம் குறித்து மாறாக எதுவும் தெரிவிக்காதநிலையில் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டதாக குறிப்பாக காணப்படும் நிலையில் அது குறித்து முரண்பட்டு கட்சி செய்வதற்கு எதிர்மனுதாரர்கள் தடைபட்டுள்ளனர். இதன்படி பார்க்கும்போது மனுதாரருடைய சுவாதீனம் சட்டப்படியானது என்பதால் மனுதாரர் கூறியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக,**

இந்த மனு செலவு தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, மனு சொத்தை மனுதாரர் அமைதியாக அனுபவித்து வருவதை எதிர்மனுதாரர்களோ, அவர்களது ஆட்களோ எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என்றும் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு மார்ச் மாதம் 20–ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

C RAJALINGOM

Digitally signed by C RAJALINGOM
Date: 2025.03.20 18:52:09 +0530

4–வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை

**<u>மனுதாரர்தரப்பிலும் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள்:— இல்லை</u>**

**<u>எதிர்மனுதாரர்தரப்பிலும் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள்:— இல்லை</u>**

C RAJALINGOM

Digitally signed by C RAJALINGOM
Date: 2025.03.20 18:52:21 +0530

4—வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை

FAIR/DRAFT ORDER
In
IA.No.1/2021

in
OS.No.272 / 2021
Date:20.03.2025
IV$^{th}$ ADJ Udt